**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.183** **நாள் : 04.06.2026**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலத்தில் ரூபாய் 5.44 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட சென்னை உருது நடுநிலைப் பள்ளி மற்றும் சென்னை தொடக்கப் பள்ளிக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு-73, புளியந்தோப்பு, மன்னார்சாமி கோயில் தெருவில் ரூ.3.24 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்ட சென்னை உருது நடுநிலைப்பள்ளிக் கட்டடம் மற்றும் வார்டு-75, நம்மாழ்வார்பேட்டை, சின்னபாபு தெருவில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட சென்னை தொடக்கப் பள்ளிக் கட்டடம் என மொத்தம் ரூபாய் 5.44 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 2 புதிய பள்ளிக் கட்டடங்களை இன்று (04.06.2026) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு புத்தகப்பை, பாடப்புத்தகங்கள், காலணி, சீருடை உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார்.

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 206 தொடக்கப் பள்ளிகள், 130 நடுநிலைப் பள்ளிகள், 46 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப் பள்ளிகள் இன்று (04.06.2026) திறக்கப்பட்டன. இன்று பள்ளிக்கு வருகைபுரிந்த மாணவ, மாணவியருக்கு ஆசிரியர்கள் இனிப்புகளை வழங்கி அன்புடன் வரவேற்றனர். பள்ளி திறந்த முதல் நாளான இன்று சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு புத்தகப்பை, பாடப்புத்தகங்கள், காலணி, சீருடை உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில், திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி மோ.ரா.பல்லவி, இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., கல்வி நிலைக்குழுத் தலைவர் திரு.த.விசுவநாதன், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு.ச.அம்பேத்வளவன், திருமதி எல்.ரமணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**